1974 சனவரி 25]

THIRU K. S. KOTHANDARAMIAH: Though it is called Palar, there is neither 'Pal' பால் nor water in it. Unless water is brought from other sources, water will not flow in Palar. Will the Hon. Minister for Public Works tell us whether he would try to bring in waters of Godavari or Krishna via Dharmapuri district and then divert the water to Palar?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது வேறு தனிப்பிரச்னை. உறுப்பினரவர்கள் தனியாகக் கேள்வி போடவும்.

சேத்தூர் வாய்க்கால் திட்டம்

* 168 வினு—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுகா சேத்தூர் வாய்க்கால் வெட்டப்பட டெண்டர் விட்டு 2 வருட காலமாகியும் வெட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நில ஆர்ஜிதத்திற்கான சில புலன்களின் சர்வே எண்களில் முரண்பாடு இருந்ததால் இத் திட்டம் செயலாக்கத்திற்கு முன்னதாகவே எடுத்துக் கொள்ளப் படாமல் இருந்தது. தற்சமயம் இத்திட்டத்திற்கான வேலைகளில் 95 விழுக்காடு முடிக்கப்பட்டுவிட்டன. மார்ச் 1974-க்குள் மீத முள்ள வேலைகள் யாவும் முடிவடைந்துவிடும்.

கூட்டுறவு நூற்பாலைகள்

* 169 வினு—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

தமிழகத்தில் தற்போதுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுள் லாபத்தில் இயங்கி வருபவை எவையெவை ?